**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE : 03.02.2026

Depositions of witness for Prosecution

PW : 3

| | | | |
|---|---|---|---|
| Name | **ஜீவமணி** | Caste | |
| Husband's Name | **ரத்தினம்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of February 2026

**(எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை : –**

நான் அணைகரைப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேதி ஞாபகம் இல்லை. நான் எங்கள் ஊரில் உள்ள ராஜாராம் அவர்களின் தோட்டத்தில் காலை சுமார் 9 மணி அளவில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ராஜாராம் அவர்களும் தோட்டத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது எதிரிகள் முனியாண்டி மற்றும் அவரது மகன் அந்த தோட்டத்திற்கு மாடுகளுடன் வந்து ராஜாராம் அவர்களின் தோட்டத்தில் மேய விட்டார்கள். நாங்கள் அவர்களை சத்தம் போட்டோம். அதனை எதிரிகள் கேட்காமல் தொடர்ந்து மேய்த்துக் கொண்டே இருந்தார்கள்.

ராஜாராம் அவர்களும் எதிரிகளை சத்தம் போட்டார். அப்பொழுது எதிரிகள் அருவாளை கொண்டு ராஜாராமை வெட்ட வந்தார்கள். ஓத்தா உங்கஅம்மா என்று அவர்கள் அசிங்கமாக பேசினார்கள்.அதன் பின்பு ராஜாராம் அவர்கள் எதிரிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்கிறேன் என்று என்னை

தோட்டத்தை பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு சென்றார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் எத்தனை வருடங்களாக ராஜாராம் தோட்டத்தில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சுமார் ஒன்றரை வருடங்கள் இருக்கும். ராஜாராமுக்கும் ஆஜர் எதிரிகளின் தோட்டமும் அருகருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் தோட்டத்திலும் வாழை நடவு செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். இருவரின் தோட்டமும் சாலையில் இருந்து சற்று தொலைவில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் சம்பவ இடத்தில் என்னையும், ராஜாராமையும் தவிர வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்ற பின்னர் காவலர்கள் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நான் வேலை பார்த்து வரும் முதலாளிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல உண்மையில் சம்பவம் நடைபெற்றது இருந்தால் சம்பவம் குறித்து பக்கத்து காட்டின் உரிமையாளர்களிடம் சொல்லி இருப்பேன் என்றும். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான் அருகில் உள்ள காட்டின் உரிமையாளர்களுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு